# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 160/10 — 1975 අප්‍රේල් 19 වැනි සෙනසුරාදා — 1975.04.19**

160/10 ம் இலக்கம்—1975 ம் ஆண்டு எப்பிறல் மாதம் 19 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண் : டபிளியு. 68(50)/75.

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்**

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ், முதலமைச்சரின் விதப்புரையின் மேல், சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

வி. கொபல்லவ,
சனாதிபதி.

நுவரெலியா,
1975 எப்பிரல் 19.

**ஒழுங்குவிதிகள்**

1. வெடிப்பொருட்கள் சட்டம், 1966 இன் 18 ஆம் இலக்கத் தீங்கு விளைக்கும் ஆயுதங்கள் சட்டம், சுடுபடைக் கலங்கள் கட்டளைச்சட்டம் அல்லது தண்டனைச் சட்டக்கோவையின் VI ஆம் VII ஆம் அல்லது VIII ஆம் அத்தியாயத்தின்கீழ் அல்லது ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின்கீழ் ஏதேனும் சிறைச்சாலையில் கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளவரும் தவறொன்றுக்காக சந்தேகிக்கப்பட்டுள்ளவருமான அல்லது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளவருமான யாரேனுமாள் தொடர்பில், இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

2. நீதியமைச்சின் செயலாளர், சிறைச்சாலைகள் ஆணையாளருக்கு முகவரியிடப்பட்ட எழுத்திலான கட்டளை மூலம், செயலாளர் அத்தகைய கட்டளையிற் குறிப்பிடக்கூடிய அத்தகைய நியதிகள் அல்லது நிபந்தனைகள், எவையேனுமிருப்பின், அவற்றிற்கமைய, இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடைத்தாகும் எவரேனுமாளைக் கட்டுக்காவலிலிருந்து விடுமாறு அல்லது விடுவிக்குமாறு, அத்தகைய ஆணையாளரைப் பணிக்கலாம்.

3. இரண்டாம் ஒழுங்குவிதியின்கீழ் செயலாளரினால் வழங்கப்பட்ட கட்டளையொன்றைப் பெறும் சிறைச்சாலைகள் ஆணையாளருக்கு அத்தகைய கட்டளையை நிறைவேற்றுதல் கடமையாதல் வேண்டும்.

4. எவையேனும் நியதிகள் அல்லது நிபந்தனைகளுக்கமைய 2 ஆம் ஒழுங்கு விதியின்கீழ் எவரேனும் ஆள் கட்டுக்காவலிலிருந்து விடப்பட்டவிடத்து, அத்தகைய நியதிகளுக்கு அல்லது நிபந்தனைகளுக்கு இசைந்து அல்லது இணங்கி ஒழுகுதல் அத்தகைய ஆளின் கடமையாதல் வேண்டுமென்பதோடு, அவ்வாறு செய்யத் தவறியமை தவறொன்றாதலும் வேண்டும்.


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது